வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, நவம்பர்- 2017
# Term Examination, November - 2017

FWC

| தமிழ் I | தரம் :- 13 (2018) | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள் :**

**பகுதி I இல் உள்ள இரு வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி – I

1) **மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

(i). அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொள் முரசின் மூவிருமுற்றினும்
உழவர் உழாதன நான்கு பயன் உடைத்தே
ஒன்றே சிறியிலைவெதிரின் நெல்விளையும்மே
இரண்டே தீஞ்சுளைப்பலவின் பழமூழ்க்கும்மே
மூன்றே கொழுங்கொடி வள்ளிக்கிழங்கு வீழ்க்கும்மே,
நான்கே அணிநிற ஓரிபாய்தலின் மீது அழிந்து
திணிநெடுங்குன்றம் தேன் சொரியும்மே.
வான்கண் அற்று அவன் மலையே வானத்து
மீன்கண் அற்று அதன் சுனையே.........

அ) செய்யுளின் பொருளை உமது உரைநடையில் எழுதுக.
ஆ) உழவர் உழாதன நான்கு பயன்களும் எவை?
இ) இச்செய்யுளினூடாகப் பாரியின் வீரம் புலப்படுமாற்றைத் தெளிவுறுத்துக.
ஈ) பறம்பு மலையும் அதன் சுனையும் எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகின்றது.

(4 x 3 = 12 புள்ளி)

(ii). கொடியாள் இன்ன கூறினாள் கூற குலவேந்தன்
முடிசூட்டாமல் வெம்பரன் மொய்கானிடை மெய்யே
நெடியான் நீங்க நீங்கும் என் ஆவி இனி என்னா
இடியேறுண்ட மால்வரை போல் மண்ணிடை வீழ்ந்தான்.

அ) இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.
ஆ) இச்செய்யுளின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.
இ) செய்யுளில் இடம்பெறும் அணியை எடுத்துக்காட்டி விளக்குக.
ஈ) கொடியாள், நெடியான் எனக்குறிப்பிடப்படுபவர்கள் யாவர்?

(12 புள்ளிகள்)

2) ‘அ’ பகுதி அல்லது ‘ஆ’ பகுதிக்கு விடைதருக.

அ) கீழ்த்திசையின் இருட்கீறிகிளர் உஷைநுதலில்
கிளிமூக்கு நிறப்பொட்டு தீட்டும் கிரணன்
ஆழ்கடலின் அலைகளிடம் ஆடல் கற்றே
அனற்சுவாலை யிடத்தோடி அருளும் காற்று
வீழ்புனல் ஏழ்வர்ணம் விளைத்து புலத்தை
விளைவேற்றி வினையின் திறம் விளம்பும் நதிகள்
சூழ்மதுவை விருந்தீந்து சுரும்புவ
சுகந்தத்தைத்தூவு குளிர் சோலை மலர்கள்

அந்தரத்தே இருட்சாணம் மெழுகி உருவாம்
அரும்புள்ளிக் கோலமிடும் அந்திவானம்
விந்தையதாம் வேழமென விண்ணில் பறந்து
வெண்முத்து நேர்திவலை சிந்தும் மேகம்
செந்துளிராம் புல்நுனியில் வைரச் சிரிப்பைத்
தெளித்து ரவிஅணைப்பில் சேர் பனித்துளிகள்
சுந்தரமாய் காதலர்கள் தூக்கம் நீங்கிச்
சொல்லாடத் தூண்டவரும் சோதிமதியம்.

மண்ணுழுது பொன்நெல் தரும் தாய் நேர் உழவர்
மானமொடு வாழக்கலை நெய்கை கோளர்
விண்ணதிர முரசார்த்துப் பகைமை வீழ்த்தி
வெற்றியின் சங்கூதுகின்ற யுத்தவீரர்
கண்துயிலை நேர்மரணம் கண்ணில் விழிப்பு
காட்சி நிகர ஜனனம் மொழிகாக்கும் கவிஞர்
உண்மை என உள்ளதெனும் தெய்வம் இந்த
உலகதனைப் படைக்க முதல் உற்றது தொழிலே

தொழில் இன்றேல் அழிவாகும் அழிவது தொழிலே
தொழில்லா இடமில்லை சுதந்திரம் தொழிலே
அழகில்லா ஒன்றினை அழகாக்கும் தொழிலே
அச்சமில்லாப் உச்சிதத்தின் ஆக்கம் தொழிலே
கழவில்லாப் பெருமையதன் கருத்துத் தொழிலே
காலத்தால் களங்கமுறா கற்புத் தொழிலே
தொழிலாளர் ஓங்கிடுக அவர் பசி துடைக்கத்
தொண்டாற்றல் நமது தொழில் கவிதைத் தொழிலே.

The National e-learning portal for The General Education

I. இங்கு குறிப்பிடப்படும் தொழில்கள் எவை?

II. ‘‘தொழில் இன்றேல் அழிவாகும் அழிவது தொழிலே’’ என்ற வரிகள் இக்கவிதையில் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக.

III. இச்செய்யுளில் காணப்படும் அணிகளை எடுத்துக் காட்டிவிளக்குக.

IV. ‘‘தெய்வம் இந்த உலகதனைப் படைக்க முதல் உற்றது தொழிலே’’ என்ற வரிகள் பற்றிய உமது எண்ணக்கருத்தை விளக்குக.

(4 x 4 = 16 புள்ளி)

**அல்லது**

ஆ) பொழுது புலர்ந்து விட்டது கங்கைக்கரைமேல் இருவரும் சென்று கொண்டிருக்கின்றார்கள். யாரோ ஆற்றுக்குள் நின்று கணீரென்ற குரலில் காயத்திரியைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஜபம் முடியுமட்டும் தம்பதிகள் கரையில் எட்டிக் காத்து நின்றார்கள். ''சதானந்தா!'' என்று கூப்பிட்டார் கோதர்.

''அப்பா ………… அம்மா ! என்று உள்ளத்தின் மகிழ்ச்சியைக் கொட்டிக் காலில் விழுந்து நமஸ்கரித்தான் சதானந்தன். அகலிகை அவனை மனசால் தழுவினான். குழந்தை சதானந்தன் எவ்வளவு அந்நியனாகி விட்டான். தாடியும் மீசையும் வைத்துக்கொண்டு ரிஷி மாதிரி:

கோதமருக்கு மகனது தேஜஸ் மனசைக் குளுமையூட்டியது சதானந்தன் இருவரையும் தன் குடிசைக்கு அழைத்துச் சென்றான். சிரமபரிகாரம் செய்து கொள்வதற்கு வசதி செய்து விட்டு ஜனகனது தத்துவவிசார மண்டபத்திற்குப் புறப்படலானான்.

கோதமரும் உடன்வருவதாகப் புறப்பட்டார். மகனுக்கு அவரை அழைத்துச் செல்வதில் பிரியந்தான். நெடுந்தூரப் பிரயாணமாச்சே என்று ரத்த பந்தத்தின் பரிவால் நினைத்தான். ஊழிக்காலம் நிஷ்டையில் கழித்தும் வாடாத தசைக்கூட்டம், இந்த நடைக்குத் தளர்ந்து விடப்போகிறது? அவனுக்குப் பின் புறப்பட்டார் அவருடைய தத்துவ விசாரணையின் புதிய போக்கை நுகர ஆசைப்பட்டான் மகன்.

மிதிலையின் தெருக்கள் வழியாகச் செல்லும் போது அயோத்தியில் பிறந்த மனத்தொய்வும் சோகமும் இங்கும் படர்ந்திருப்பதாகப் புலப்பட்டன. கோதமருக்கு அடக்கிவிட்ட பெருமூச்சு காற்றினூடே கலந்து இழைத்தது.

ஜனங்கள் போகிறார்கள், வருகிறார்கள், காரியங்களைக் கவனிக்கிறார்கள், நிஷ்காம்ய சேவைபோல எல்லாம் நடக்கிறது, பிடிப்பு இல்லை, வலிப்பு இல்லை

I. சதானந்தன் தாய் தந்தை மீது கொண்ட அன்பினை எடுத்துக்காட்டி விளக்குக.

II. அகலிகையின் தாய்மையுணர்வு வெளிப்படுமாற்றினை விளக்குக.

III. ,,குழந்தை சதானந்தன்'', ''ரிஷி மாதிரி'' என்ற சொற்றொடர்கள் இங்கு எவற்றை எடுத்துக் காட்டி நிற்கின்றன.

IV. ஆசிரியரின் மொழிநடை பற்றிக் கருத்துரை வழங்குக.

(4 x 4 = 16 புள்ளி)

The National e-learning Portal for The General Education

## பகுதி – II

3) "வினைத்தூய்மை என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளவற்றை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ) வினைத்தூய்மையின் சிறப்பு

ஆ) பாவமும் பழியும் பயக்கும் வினைகளைச் செய்யக்கூடாது.

இ) அதற்கான காரணம்.

ஈ) அவ்வதிகாரத்தில் கையாண்ட உவமையணியின் சிறப்பு.

(6 + 6 + 4 + 4 = 20 புள்ளிகள்)

4) கைகேயி சூழ்வினைப் படலத்தில் கைகேயியை விட்டுக்கூனி நீங்கியது முதல் கையேயி கேட்டவரங்களினால் துனுக்குற்ற தசரதன் நிலத்தில் வீழ்ந்தது வரையுள்ள பகுதியில்

அ) வரத்தைப் பெறுவதற்காக கைகேயியின் செயலும் சொல்லும்

ஆ) தசரதன் அவள் மீது கொண்ட அளவற்ற அன்பு

இ) இந்நிகழ்வினைச் சித்தரிக்கும் கம்பரின் கவித்துவம் என்பவற்றை விளக்குக.

(7 + 7 + 6 = 20 புள்ளிகள்)

5) பைதிரம் நீங்கு படலத்தில் வானதூதுவன் கட்டளையைக் கேட்டு எகிப்து தேசத்துப் பயணம் செய்தமையினூடாகப் பின்வருவனவற்றை விளக்குக.

அ) சூசையும் மரியன்னையும் அடைந்த துன்பம்

ஆ) யேசுபாலனின் மகிமைகள்

இ) எகிப்து செல்லத் தயங்கியமைக்கான காரணங்கள்

ஈ) இறைவனின் பெருமைகள்

(6 + 6 + 4 + 4 = 20 புள்ளிகள்)

6) வெறும் சோற்றுக்கே வந்தது என்ற சிறுகதையினூடாக

அ) வள்ளி என்ற பாத்திரத்தின் எதிர்பார்ப்புக்களும் ஏமாற்றமும்

ஆ) வன்னிப் பிரதேச மக்களின் வாழ்வியற் கோலங்கள்

இ) கதைப்பின்னலில் ஆசிரியர் கையாண்ட மொழிநடை என்பவற்றை விளக்குக.

(7 + 7 + 6 = 20 புள்ளிகள்)

7) பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் நகைப்பூங்கொத்து கட்டுரையினூடாக பின்வருவனவற்றை விளக்குக.

அ) தலைவியின் மனஉணர்வு.

ஆ) தோழியின் மதிநுட்பம்

இ) ஆசிரியர் தான் கூறவந்த விடயத்தை வலியுறுத்த கையாண்ட உத்திகள்.

(20 புள்ளி)

8) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.

அ) பெரியாழ்வார் திருமொழியில் கண்ணனின் குறும்புகளும் தீய சக்திகளை ஒறுத்தலும்.

ஆ) நீண்டபயணம் நாவலில் ஒடுக்கப்பட்ட மக்களின் அவலங்கள்.

இ) மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்ற கவிதையில் பேரழிவு கண்டு தளராத விவசாயியின் ஓர்மம்

ஈ) சிலப்பதிகாரம் துன்பமாலையில் கணவன் அநீதியாகக் கொலையுண்டதை அறிந்த கண்ணகியின் ஆவேசம்.

(10 + 10 = 20 புள்ளிகள்)

FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
# Field Work Centre

**தவணைப் பரீட்சை, நவம்பர்- 2017**

**Term Examination, November - 2017**

| தரம் :- 13 (2018) | தமிழ் - II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

அறிவுறுத்தல்கள் :

- ❖ பகுதி I இல் உள்ள மூன்று வினாக்களையும் பகுதி II இல் "அ" பிரிவிலிருந்து ஒரு வினாவையும் "ஆ" பிரிவிலிருந்து ஒரு வினாவையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.
- ❖ முதலாம் வினாவின் "அ" பகுதியிலுள்ள இருபது வினாக்களும் தனியாக தரப்பட்டுள்ளன. அவற்றுக்கான விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதி அதனை உமது ஏனைய விடைத்தாள்களின் மேல் வைத்து இணைத்துக் கொடுக்கவும்.

## பகுதி – I

01) (அ) எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.

1. கடையண்ண வெடிப்பொலியாக அமையும் எழுத்து யாது?
(1) க் (2) ங் (3) த் (4) ட் (5) ண் (……)

2. சொற்களில் மூன்று மெய்கள் மயங்கி வரும் எழுத்துக்கள் எவை?
(1) க்,ற்,ய் (2) ழ்,ப்,ற் (3) ய்,ர்,ழ் (4) ய்,ர்,க் (5) ழ்,ப்,ற் (……)

3. சித்தரித்தான் என்ற பகுபதத்தின் பெயரடி யாது?
(1) சித்தரி (2) சித்திரம் (3) சித்திரி (4) சித் (5) சித்தி (……)

4. சுடுகாட்டினை நன்காடு என அழைப்பது.
(1) இடக்கரடக்கல் (2) குழூஉக்குறி (3) மரூஉ
(4) மங்கலம் (5) போலி (……)

5. பெயரும் வினையும் இணைந்த கூட்டுப்பெயர் யாது?
(1) அடிபிடி (2) தலையிடி (3) தலைமுடி (4) இடியடி (5) பிடிபடு (……)

6. எழுத்துப்பிழை இடம்பெற்றுள்ள சொல்.
(1) செய்நன்றி (2) ஏழ்மை (3) செய்ந்நன்றி
(4) வெந்நீர் (5) பழைமை (……)

7. நிலைமொழி ஈற்று மெய் இரட்டித்துப் புணர்ந்த சொல்.
(1) வெற்றி (2) பண்ணிசை (3) கண்ணீர்
(4) நன்னூல் (5) சொன்னேன் (……)

8. மூன்று நாளில் திரும்பிவிடுவேன் இங்கு இல் உருபு உணர்த்தும் பொருள்.
(1) நீங்கல் (2) இடம் (3) அடைதல்
(4) ஓரிடம் நோக்கி நகர்தல் (5) காலவரையறை (……)

9. ஊதுவத்தி என்பது எந்தமொழிச் சொல்.
(1) கிரேக்கம் (2) தெலுங்கு (3) பிரெஞ்சு
(4) உருது (5) கன்னடம் (……)

The National e-learning Portal for The General Education

10. இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஆக அமைந்த தொடர்.
(1) நல்லபாம்பு (2) நாற்காலி (3) இன்சொல்
(4) மற்றொன்று (5) சுடுசொல் (……)

11. காலம் காட்டாத இடைநிலையாக அமைவது.
(1) ஞ் (2) த் (3) கின்று (4) ப் (5) வ் (……)

12. பின்வருவனவற்றுள் "இரு" துணைவினையாக அமைந்த தொடர்.
(1) வந்திருப்பாள் (2) என்ன இருக்கிறது (3) என்னிடம் இருக்கிறது.
(4) இருந்தாற் போல வந்தார் (5) வகுப்பில் இருங்கள் (……)

13. தலைமை என்ற சொல்லுக்குரிய மாத்திரைப் பெறுமானம்.
(1) 04 (2) 2 ½ (3) 5 (4) 3 (5) 3 ½ (……)

14. பின்வருவனவற்றில் அகரவரரிசையில் அமையாத சொற்தொகுதி.
(1) கண்டி, காலி, கொழும்பு (2) ஆப்பு, காப்பு, சீப்பு
(3) நொண்டி, நோய், நௌவி (4) எங்கு, ஏங்கு, ஓங்கு
(5) தெங்கு, பங்கு, நுங்கு (……)

15. " சுசீலா தன் கணவனுடன் வெளிநாடு போனதைப் பற்றி எனக்கு யாரும் சொல்லவில்லை. இவ்வாகியத்தின் எழுவாய்.
(1) சுசீலா (2) எனக்கு (3) யாரும்
(4) வெளிநாடு (5) கணவன் (……)

16. பின்வருவனவற்றுள் பொருள் மயக்கம் அற்ற வாக்கியம்.
(1) பத்து வயது போன முதியவர் அங்கு கூடி இருந்தனர்.
(2) புதிய விருந்தினர் தங்கும் விடுதி அருகே உள்ளது.
(3) மேலதிகமாகாணக்கல்விப் பணிப்பாளர் தலைமை தாங்கினார்.
(4) சிறுவர் உரிமைகளுக்காகப் பேசினாள்.
(5) பெண்கள் ஒழுக்கமுறைக்கெதிராகக் கமலா பேசினாள். (……)

17. "அவவுக்கு நெடுக – வாரப்பாடு தன்ர மூத்த மேளிலைதான்" இது
(1) யாழ்ப்பாணப் பிரதேசப் பேச்சுவழக்கு (2) மலையகப் பேச்சு வழக்கு
(3) முஸ்லிம் பேச்சு வழக்கு (4) பிராமணிய சமுதாயப்பேச்சு வழக்கு
(5) மட்டக்களப்புப் பேச்சு வழக்கு (……)

18. ,பத்து ஆண்டுகள் கொண்ட பகுதி
(1) சகாப்தம் (2) தசாப்தம் (3) மிலேனியம்
(4) நூற்றாண்டு (5) பத்தாண்டு (……)

19. பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வினையாகவும் செயப்படு பொருள் குன்றா வினையாகவும் வரம் வினையடி.
(1) அடி (2) படி (3) விடு (4) எரி (5) சிரி (……)

20. செய்து என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம் சேர்ந்து ஆக்கப்படும் கூட்டுவினை.
(1) பற்றவை (2) வெட்கப்படு (3) கண்டுபிடி
(4) போரிடு (5) கோபப்படு (……)

**ஆ) பின்வரும் ஐந்து வினாக்களுக்கும் சுருக்கமான விடை தருக.**

(1) ஆய்தக்குறுக்கம் என்றால் என்ன? உதாரணம் தந்து விளக்குக.

(2) அ ∴ றிணை இருபாற்பொதுப் பெயர் என்றால் என்ன உதாரணம் விளக்குக.

(3) இயங்குவினை, இயக்குவினை இவற்றிற்கு உதாரணம் தருக?

(4) அவ்வழிப்புணர்ச்சி என்றால் என்ன? உதாரணம் தருக.

(5) எழுவாய் தொக்கிய வாக்கியங்களுக்கு இரண்டு உதாரணம் தருக?

(2x5=10 புள்ளி)

**02) (அ) பின்வரும் உரைப்பகுதியை 50 சொற்களில் சுருக்கி எழுதுக.**

ஓர் இலக்கியப் படைப்பாளி தன்னைச் சுற்றிவாழும் சகமனிதர்களையும், அவர்களது நடவடிக்கைகளையும், அவ்வவ்போது நம் சமூகத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும் சம்பங்களையும், மாறுதல்களையும், அவற்றுக்கான அக – புறக் காரணங்களையும் உற்று நோக்கும் போது எழும் ஒருவகை மன உந்துதல் காரணமாக ஒரு கலைப்படைப்பைப் படைக்க ஆரம்பிக்கின்றான். அதன்வழியே அவன் இந்தச் சமூகத்திட்டம் சில விஷயங்களை அல்லது செய்திகளைத் தெரிவிக்க ஆசைப்படுகின்றான். இப்படித்தான் நம் சமூகத்தில் ஒரு படைப்பாளி உருவாகின்றான். இவ்வாறு அவன் ஒரு படிப்பாளியாகவோ பண்டிதனாகவோ இருக்க வேண்டும். என்ற கட்டாயம் ஒன்றும் கிடையாது. அதுமட்டுமல்ல கலைஇலக்கியக் கோட்பாடுகள் உலகத் தத்துவங்கள் போன்றவைகளைப் படித்துத் தெரிந்திருக்க வேண்டும். என்ற அவசியமும் இல்லை. இவனது படைப்பு, கருத்து, கண்ணோட்டம், சமூக நிகழ்வுகளைப் பற்றிய மதிப்பீடு போன்றவை குறுகிய கண்ணோட்டத்துடன் அல்லது கோணல் மாணலான சித்தரிப்பாக இவனது ரசனைக்கும் விருப்பத்திற்கும் இசைய திசைமாறிச் செல்ல வாய்ப்புண்டு. இம்மாதிரிக் கட்டத்தில் அத்தவறான போக்கினைக் கண்டித்து அவனை விமர்சித்து அப்படைப்பைச் செறிவு படுத்த வேண்டியது அவசியமாகின்றது. இதை இலக்கியத் திறனாய்வின் மூலமே சாதிக்க முடியும்.

(10 புள்ளி)

**ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

தென்னிந்தியாவில் வழங்குந் திராவிடமொழிகளுள்ளே தமிழ்மொழி தனிப்பட்ட சிறப்புடையதாக விளங்குகின்றது. தெலுங்கு மொழியை எடுத்துக் கொள்வோமாயின் அதற்குரிய ஆதி இலக்கியமாகிய நன்னய பாரதம் என்ற நூல் கி.பி 11ஆம் நூற்றாண்டில் தோன்றியதாகும். கன்னடமொழியை எடுத்துக்கொள்வோமாயின் அதற்குரிய ஆதி இலக்கியமாகிய கவிராஜ மார்க்கம் என்ற நூல் கி.பி 9ஆம் நூற்றாண்டில் தோன்றியதாகும். மலையாள மொழியை எடுத்துக்கொள்வோமாயின் அதற்குரிய ஆதியிலக்கியமாகிய ராமசரிதம் என்ற நூல் கி.பி 14ஆம் நூற்றாண்டில் தோன்றியமை பிரசித்தம், ஆனால் தமிழ்மொழியின் ஆதி இலக்கியங்களோ இப்போது அறுதி இட்டிருக்கின்றபடி கிறிஸ்து ஆண்டின் ஆரம்ப காலத்திலே தோன்றியனவாகும் இங்கே ஆதியிலக்கியங்களென்றது இப்போது அகப்படுவனவற்றுள் காலத்தால் முற்பட்டவற்றையே, இவ்விலக்கியங்களின் திருந்திய வடிவங்களையும் முதிர்ந்த பக்குவத்தையும் நோக்குமிடத்து

கிறிஸ்து ஆண்டில் மிகமிக முற்பட்ட காலத்தே தமிழ் இலக்கியங்கள். உருப்பெறத் தொடங்கியிருத்தல் வேண்டுமென்று எளிதில் ஊகித்தல்கூடும்.

(i) தென்னிந்தியாவில் வழங்கும் திராவிட மொழிகள் சிலவற்றைக் குறிப்பிடுக.

(ii) தமிழ் மொழியில் ஆதிஇலக்கியங்கள் எப்போது தோன்றின.

(iii) தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளின் ஆதி இலக்கியங்கள் எவை?

(iv) தமிழ் மொழியின் ஆதி இலக்கியங்கள் காலத்தால் முற்பட்டவை என்பதற்கு ஆசிரியர் கூறும் விளக்கம் யாது?

(v) தமிழ் தனிப்பட்ட சிறப்புடையதாக விளங்குவதற்குக் காரணம் யாது?

(5x2=10 புள்ளிகள்)

**03) பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிவு செய்து 300 – 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.**

அ. தமிழில் பேச்சு வழக்கும் இலக்கிய வழக்கும்

ஆ. தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு

இ. வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்தல்

ஈ. முத்தமிழ் வளர்ச்சிக்கு விபுலானந்தரின் பங்களிப்பு

உ. கற்றனைத்தூறும் அறிவு.

(20 புள்ளிகள்)

e-தக்சலாவ The National e-learning Portal for The General Education

## பகுதி – II

### பிரிவு – அ

**04)** அ. சங்கமருவிய காலத்தில் தோன்றிய நூல்களை வகைப்படுத்திக் காட்டுக.

ஆ. சங்கமருவிய காலத்தில் அறநூல்கள் அதிகம் தோன்றியமைக்கான காரணிகளை விளக்குக.

இ. சங்க மருவிய கால இலக்கியப் பண்பு சங்ககால இலக்கிய பண்பிலிருந்து வேறுபடுமாற்றை விளக்குக.

(5 + 5 +5 =15புள்ளிகள்)

**05)** அ. பல்லவர் காலத்திலே பெருமளவு பக்தி இலக்கியங்கள் தோன்றியமைக்கான காரணத்தைத் தெளிவுபடுத்துக.

ஆ. பல்லவர் காலத்தில் எழுந்த பக்திசாரா இலக்கியங்களைக் குறிப்பிட்டு அவை பற்றிச் சுருக்கமாக விளக்குக.

இ. சங்ககால அகத்திணை மரபு பல்லவர் கால பக்தி அனுபவத்தைப் புலப்படுத்துவதற்கு பயன்பட்டவற்றை விளக்குக.

(5 + 5 +5 =15புள்ளிகள்)

**06)** அ. சோழர் காலத்தில் தோன்றிய இலக்கியங்களை வகைப்படுத்திக் காட்டுக.

ஆ. தமிழ் இலக்கியவரலாற்றில் சோழர் காலம் காவிய காலம் எனப்படுவதன் காரணத்தை விளக்குக.

இ. கம்பரின் கவியாற்றல் பற்றி கருத்துரைக்குக.

(5 + 5 +5 =15புள்ளிகள்)

**பிரிவு – ஆ**

**07)** அ. ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்திற்கு முந்திய இலங்கைத் தமிழ் இலக்கிய வளர்ச்சி பற்றிக் கருத்துரைக்குக.

ஆ. ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் தோன்றிய இலக்கியங்களை வகைப்படுத்திக் காட்டுக.

(8 + 7 =15புள்ளிகள்)

**08)** போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் எழுந்த,

அ. புராணங்கள்

ஆ. பொது மக்கட் சார்பான நூல்கள்.

இ. நாடக நூல்கள்

என்பன பற்றிக் கருத்துரைக்குக.

(5 + 5 +5 =15புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education